# இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

## பொதுமக்களிற்கான பகிரங்க அறிவித்தல்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பெயர்பலகைகளை காட்சிப்படுத்தல், போலியான அலுவலகங்களை நடாத்துதல் மற்றும் அவ்வாறான பெயர்பலகைகள் மற்றும் VIP சின்னங்களை வாகனங்களில் பயன்படுத்துதல் தொடர்பாக எமக்கு தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இந்த போலியான குழுக்கள் போக்குவரத்து சட்டங்களை மீறல், சட்டமுரணாண பொருட்களை கொண்டுசெல்லல், பொலிஸ் நிலையங்களில் பொலிஸ் தடுப்பிலுள்ளவர்கள் மீது சட்டமுரணான விதத்தில் செல்வாக்குசெலுத்தல் போன்ற சட்டமுரணான செயற்பாடுகளை மேற்கொள்வதாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது இலங்கை அரசியலமைப்பினால் தாபிக்கப்பட்ட ஒரு சுதந்திரமான ஆணைக்குழுவாகும். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது 1996 ஆம் ஆண்டின் 21 இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச்சட்டதினால் தாபிக்கப்பட்டது. இது சேவையை வழங்கும்போது எதுவித கட்டணங்களையும் அறவிடுவதில்லை. தலைமைக்காரியாலயத்திற்கு மேலதிகமாக குறித்த சேவைகளானது பத்து பிராந்திய காரியாலயங்கள் மற்றும் மூன்று உபகாரியாலயங்களூடாக நாடாளாவிய ரீதியில் வழங்கப்படுகின்றது. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இயங்கிக்கொண்டிருக்கும் அலுவலகங்கள் மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலகங்களாக பின்வருவன இருக்கின்றன,

| | | |
|---|---|---|
| தலைமைக்காரியாலயம் | இல. 14, R.A. டி மெல் மாவத்தை, கொழும்பு – 04 | 0112505580 |
| அனுராதபுரம் | இல. 623/ 20 E, பிரீமன் வீதி, அனுராதபுரம் | 0252234801 |
| அம்பாரை | 4ம் மைல் கல், உகண வீதி, கரன்கால, அம்பாரை | 0632222340 |
| மட்டக்களப்பு | இல.46, கோவிந்தன் வீதி, மட்டக்களப்பு | 0652224420 |
| திருகோணமலை | இல.343, மின்சார நிலைய வீதி, திருகோணமலை | 0262222607 |
| கல்முனை | கிட்டங்கி வீதி, மணற்சேனை, கல்முனை – 01 | 0672229728 |
| யாழ்ப்பாணம் | இல. 1, மூன்றாம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம் | 0212222021 |
| பதுளை | இல. 43/5, குமாரசிங்க வீதி, பதுளை | 0552224594 |
| மாத்தறை | இல.09, ராகுல குறுக்கு வீதி, மாத்தறை | 0412226533 |
| கண்டி | இல.8/1, பிறிம்றோஸ் ஒழுங்கை, பேராதனை வீதி,கண்டி | 0812205024 |
| வவுனியா | இல.26/2, வெளிவட்ட வீதி, வவுனியா | 0242222029 |
| புத்தளம் | பழைய நகரமண்டப கட்டிடம், குருநாகல் வீதி, புத்தளம் | 0715663455 |
| மன்னார் | இல.121, ஆஸ்பத்திரி வீதி, மன்னார் | 0233123906 |
| கிளிநொச்சி | பழைய கச்சேரி கட்டிடம், A9 வீதி, கிளிநொச்சி | 0703654910 |

இத்தொலைபேசி இலக்கங்களிற்கு மேலதிகமாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் துரித அழைப்பு எண்ணான 1996 ஆனது 24 மணி நேரமும் செயற்பட்டுவருகின்றது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் காரியாலயங்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் உள்ளவற்றைத்தவிர வேறெந்த இடத்திலும் கொண்டிருக்கவில்லை. இந்த காரியாலயங்களிற்கு மேலதிகமாக இடைத்தரகு முகவர் அமைப்புக்களையோ அல்லது இடைத்தரகர்களையோ நியமிக்கவில்லை என்பதை இலங்கையர்களிற்கு அறியத்தருகின்றோம். ஆகவே, நீங்கள் இவ்வாறான போலியான நபர்கள் மற்றும் ஒருங்கமைக்கப்பட்ட குழுக்களினால் ஏமாற்றப்படக்கூடாது என்பதுடன் எம்மால் வழங்கப்படும் சேவைகளை நேரடியாக எமது காரியாலயங்களை தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாமென நாங்கள் அன்பாக கேட்டுக்கொள்கின்றோம்.

கலாநிதி. ஜகத் பாலசூரிய
தவிசாளர்
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.
06.05.2021